ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2118/44 – 2019 අප්‍රේල් මස 09 වැනි අඟහරුවාදා – 2019.04.09

*2118/44 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### தென் மாகாண மாகாண சபை

*தென் மாகாண மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழு பிரமாணம்*

*தென் மாகாண சபை மூலம் 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட தென் மாகாண கௌரவ ஆளுநர் மூலம் 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட தெண் மாகாணத்தின் 2019 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழு பிரமாணம் ஆளுநரின் அனுமதியைப் பெற்று 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறையாகும் என தென் மாகாண சபையின் விவசாய, கமத்தொழில் அபிவிருத்தி, நீர்ப்பாசன, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, உணவு வழங்கல் மற்றும் விநியோக, வியாபார மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான அமைச்சர் உடலமத்த கமகே தயாவங்ச ஆரியதிலக ஆகிய நான், இதன் மூலம் அறியத் தருகின்றேன்.*

**உடலமத்த கமகே தயாவங்ச ஆரியதிலக,**
தென் மாகாண சபையின் விவசாய, கமத்தொழில் அபிவிருத்தி,
நீர்ப்பாசன, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு,
உணவு வழங்கல் மற்றும் விநியோக, வியாபார மற்றும்
கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான அமைச்சர்.

*தென் மாகாண சபையின் விவசாய, கமத்தொழில் அபிவிருத்தி,
நீர்ப்பாசன, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, உணவு
வழங்கல் மற்றும் விநியோக, வியாபார மற்றும் கூட்டுறவு
அபிவிருத்தி தொடர்பான அமைச்சர்.
4 ஆம் மாடி, தக்சிணபாய, லபுதுவ, காலி,
2019, ஏப்பிறல், 01.*

1A - PG4477 -10 (2019/04)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2019 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, தென் மாகாண சபை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகள்**

தென் மாகாண சபை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு ஒன்றினை நிறுவுவதற்கான உரிய ஒழுங்கு விதிமுறைகளை திட்டமிடுவதற்காகவும், தென் மாகாண சபைக்கு உட்பட்ட கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் தொடர்பான விசேட ஏற்பாட்டைச் திட்டமிடுவதற்காகவும் மற்றும் அவை தொடர்பான அல்லது அவற்றோடு தொடர்புபட்ட விடயங்கள் அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு நியதிச் சட்டம் ஆகும்.

*சுருக்கப் பெயர் மற்றும் நடை முறைக்கு வரும் திகதி.*

1. (1) இச்சட்டவாக்கம் தென் மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கம் கொண்ட தென் மாகாண சபைக் கூட்டுறவு ஆணைக்குழு நியதிச் சட்டம் என அழைக்கப்படுகின்றது.

(2) 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவுச் சபைகள் நியதிச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் இந் நியதிச் சட்ட ஒழுங்கு விதிகள் மற்றும் பொருந்தாமல் இருப்பின் அந்நியதிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் தென் மாகாண சபைக்குள் நீக்கப்பட்டு அல்லது செயற்படுத்தாமல் இருக்க வேண்டும்.

*அமைச்சர் இச் சட்டவாக்கத்தினை நியமம் செய்தல் மூலம் கூட்டுறவுச் சங்கங்களை விடுவித்துக் கொள்ளலாம்.*

2. அமைச்சர், மாகாண ஆணையாளர் மற்றும் ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட நியதிச் சட்டங்கள் மூலம் இச்சட்டவாக்கத்தின் ஒழுங்கு விதிகளை உரித்தாக்கிக் கொள்ளல்;

(அ) அதன் மூலம் விதிக்கப்பட வேண்டிய எந்தவொரு கூட்டுறவுச் சங்கமும்; அல்லது,

(ஆ) அவ்வாறு விதிக்கப்பட வேண்டிய எந்தவொரு கூட்டுறவுச் சங்க வகுப்பும் விடுவிக்கப்பட வேண்டும்.

**பாகம் I**

**தென் மாகாண சபை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அமைப்பு**

*கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் அமைப்பு.*

3. (1) தென் மாகாண சபை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு (இந்நியதிச் சட்டத்தின் தென் மாகாண சபை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு எனக் குறிப்பிடுகின்றது) எனக் குறிப்பிடப்படுகின்ற ஆணைக்குழு ஒன்று இதன் மூலம்அமைக்கப்பட்டு உள்ளது.

(2) ஆணைக்குழு (1) ஆவது உப பிரிவின் மூம் அதற்கு உரித்தாக்கப்படுகின்ற இடையறா வழியுரிமையும் பொது இலச்சினை ஒன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் அதன் கூட்டிணைப்புத் தன்மையில் அது வழக்குத் தொடரலாம் என்பதுனுடன் அதற்கு எதிராக வழக்குத் தொடவும் படலாம்.

*கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் கூட்டிணைவு.*

4. அமைச்சர் மூலம் 5 ஆவது உப பிரிவின் ஒழுங்கு விதிகளைக் கருத்திற் கொண்டு நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர்கள் மூவரைக் கொண்டதாக ஆணைக்குழு அமையப் பெற வேண்டியதுடன், அவ் அங்கத்தவர்களின் வயது 65இற்கு மேற்படாமல் இருக்க வேண்டியதுடன் குறைந்த பட்சம் 10 வருடங்கள் சட்டத்தரணி தொழிலில் ஈடுபட்ட சட்டத்தரணியாக இருக்க வேண்டும்.

*கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவில் அங்கத்துவம் பெறுவது தொடர்பான தகுதி இன்மைகள்.*

5. எவரேனும் ஒருவர் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அங்கத்தவராக நியமிப்பதற்கு அல்லது ஏற்கனவே நியமிக்கப்பட்டு இருப்பின் தொடர்ந்தும் பதவி வகிப்பதற்கு கீழ்க் காணப்படும் விடயங்கள் தேவை அற்றதாகும் அவர்

(அ) கூட்டுறவு சங்க ஊழியராக அல்லது முன்னாள் ஒரு ஊழியராயின்;

(ஆ) கூட்டுறவு சங்க ஊழியப் படையின் சம்பளம், வேதனம் அல்லது சேவை நிபந்தனைகள் ஒழுங்குபடுத்தல் அதன் நோக்கம் அல்லது நோக்கங்களில் ஒன்றாக காணப்படுகின்ற கூட்டுத் தாபனம் அல்லாத நிறுவனம் அல்லது கூட்டுத் தாபனத்தைச் சாராத எவரேனும் ஓர் அங்கத்தவராயின் ;

(இ) கூட்டுறவு சங்கம் ஒன்றின் உத்தியோகத்தர் ஒருவராயின்;

(ஈ) பாராளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர் அல்லது உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினராயின் அல்லது அவ்வாறான பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு உள்ள உறுப்பினராயின்;

(உ) இலங்கைப் பிரசை அல்லாதவராயின்; அல்லது அப்படி ஒருவராக முடிவாகின்ற ஒருவராயின்;

(ஊ) இலங்கையில் அல்லது வேறு நாட்டினது சட்டத்தின் கீழ் புத்தி சுயாதீனம் அற்றவர் எனத் தீர்மானிக்கப்பட்டு அல்லது பிரகடனப்படுத்தப்பட்ட ஒருவராயின்;

(எ) இலங்கை அல்லது வேறு ஏதாவது நாட்டினது குற்றவியல் சட்டம் தொடர்பில் ஏதாவது ஒரு நீதி மன்றத்தில் விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை அனுபவித்த ஒருவராயின், அல்லது சிறைத் தண்டனை அனுபவிக்கின்ற ஒருவராயின்;

(ஏ) ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுக்காக ஏற்படுத்தப்பட்டு உள்ள ஏதாவது ஒப்பந்தத்தின் கீழ் யாதாயினும் உரிமைகள் அல்லது பயன்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக பயன் பெறுகின்ற அல்லது அனுபவிக்கின்ற ஒருவராயின்;

(ஐ) இலங்கை அல்லது வேறு ஒரு நாட்டினது நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் அழிந்து போன அல்லது விடுவிக்க முடியாத வங்குரோத்துக்காரர் என பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு நபராயின்;

(ஒ) ஆணைக்குழுவின் அங்கத்தவராக அவர் தன்னுடைய செயற்பாடுகளை பாதிப்புக்கு உட்படக் கூடிய ஏதேனும் ஒரு நிதி அல்லது வேறு ஏதேனும் ஒரு முறையில் தொடர்பு நபராயின், அல்லது.

(ஓ) ஆணைக்குழுவின் மூலம் பின்பற்றப்பட்டு வருகின்ற மூன்று கூட்டங்களுக்கு வருகை தராத ஒருவராயின்

ஆணைக்குழுவின் தலைவர்.

6. (1) அமைச்சர் மூலம் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தலைவராகவும், (இங்கு தற்போதைய தலைவர் என அழைக்கப்படுகின்ற) வேறு ஏனைய ஓர் அங்கத்தவர் உப தலைவராகவும் நியமிக்கப்பட வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் கூட்டங்களுக்கு நிகழ்ச்சி நிரல்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் இந்நியதிச் சட்டத்தின் கோட்பாடுகள் மற்றும் ஒழுங்கு விதிகளை நிறைவேற்றும் செயற்பாடுகள் தொடர்பாக அவசியம் என அவர் மூலம் கருதப்படுகின்ற கொள்கைகள் மற்றும் சிபாரிசுகள் ஆணைக்குழுவின் கவனத்திற்கு முன் வைத்தல் தொடர்பில் தலைவர் பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளார்.

(3) அமைச்சரிடம் தலைவர் பதவியில் இருந்து கேட்டு இராஜினாமா செய்யக் கூடியதோடு, அமைச்சர் அதனை ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதி தொடக்கம் வைக்கப்படுகின்ற இராஜினாமா நடைமுறைப்படுத்தப்படும்.

(4) அமைச்சர் மூலம் 5 ஆவது பிரிவின் விடயம் தொடர்பான காரணத்தைக் குறிப்பிட்டு தலைவர் பதவியில் இருந்து பதவி விலகல்.

(5) (3) ஆவது மற்றும் (4) ஆவது உப பிரிவில் உள்ள ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டு தலைவரின் பதவிக் காலம் அவர் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கின்ற கால எல்லையாக இருக்க வேண்டும்.

(6) நோய் வாய்ப்பட்டு அல்லது வேறு ஏதேனும் ஒரு குறைபாடு தொடர்பாக அல்லது வெளியே வாழ்கின்ற படியால் அல்லது வேறு ஏதாவது விடயம் தொடர்பில் அல்லது அவனுடைய கடமையினை மேற்கொள்வதற்கு தற்காலிகமாக முடியாது போகின்ற ஒரு சந்தர்ப்பத்தில் ஓர் அங்கத்தவராக நியமிக்கப்பட்ட வேறு ஏவரேனும் ஓர் அங்கத்தவர் அவருடைய சாதாரண கடமைகளுக்கு மேலதிகமாக தலைவராக கடமையாற்றுவதற்காக அமைச்சரால் நியமிக்க முடியும்.

ஆணைக்குழுவின் அதிகாரங்களை தலைவருக்கு பொறுப்பு வழங்க முடியும் என்பது.

7. (1) ஆணைக்குழு மூலம் அதன் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் எதையேனும் கையளிக்க முடியும்.

(2) அவ்வாறு கையளிக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் தலைவர் மூலம் ஆணைக்குழுவின் சாதாரண மற்றும் விசேட விதி முறைகளுக்கு கீழ்ப்படிந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அங்கத்தவர்களின் நிதி தொடர் பானவை.

8. (1) எவரேனும் ஒருவர் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிப்பதற்கு முன்னர் ஆணைக்குழுவின் அங்கத்தவராக அவரது கடமைகளை மேற்கொள்வதற்கு முரணாக பாதிப்புக்கு உட்பட்ட அல்லது தாக்கம் செலுத்தக் கூடிய நிதி மற்றும் ஏனைய தொடர்புகள் அவரிடம் இல்லை என அமைச்சர் மன நிறைவு அடைய வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட திகதி தொடக்கம் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் எதுவேனும் ஒரு தொடர்பாகவும் கையொப்பம் இடப்படவில்லை என்பது பற்றி அமைச்சர் எந்நேரத்திலும் கூட திருப்தி அடைய வேண்டும்.

(3) (அ) ஆணைக்குழு ஏற்படுத்திய அல்லது ஏற்படுத்திக் கொள்ள திட்டமிட்டு உள்ள ஏதேனும் ஓர் ஒப்பந்தத்திற்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது ஏதேனும் ஒரு முறையில் தொடர்புள்ள எவரேனும் ஓர் அங்கத்தவர் மூலம் அவருடைய அத்தொடர்பின் தன்மையினை ஆணைக்குழுவின் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட வேண்டும், மற்றும்

(ஆ) அவ்வாறு வெளிக் கொண்டு வருகின்றமை ஆணைக்குழுவின் கூட்ட அறிக்கைளில் குறிப்பிடல் வேண்டும். மேலும் அங்கத்தவர் ஆணைக்குழுவின் அதன் ஒப்பந்த மற்றும் அதனுடன் தொடர்பான கலந்துரையாடலுக்கோ அல்லது பங்கு பற்றலாகாது.

அங்கத்தவர் களுக்கு உரிய ஒழுங்கு விதிகள்.

9. (1) அமைச்சருக்கு அனுப்பப்படுகின்ற கடிதம் மூலம் ஆணைக்குழுவின் எவரேனும் ஓர் அங்கத்தவருக்கு அவர் வகிக்கின்ற பதவியில் இருந்து இராஜினாமா செய்ய முடியுமாவதோடு, அமைச்சர் அதனை ஏற்றுக் கொண்ட நாள் தொடக்கம் அந்த இராஜினாமா நடைமுறை ஆகும்.

(2) அமைச்சர் மூலம் 5 ஆவது பிரிவின் விடயங்களுக்கு உரிய காரணங்களைக் குறிப்பிட்டு ஏதாவது ஒரு அல்லது அங்கத்தவர் பதவியில் இருந்து நீக்கப்படலாம்.

(3) (அ) ஆணைக்குழுவின் எவரேனும் ஓர் உறுப்பினர் மரணமடைதல், பதவியை விட்டு விலகிச் செல்லல், அல்லது சேவையில் இருந்து நீக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அமைச்சர் மூலம் 4 அல்லது 5 ஆம் பிரிவுகளின் ஒழுங்கு விதிகளை கருத்திற் கொண்டு வேறொரு அங்கத்தவரை வெற்றிடமான பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும்.

(ஆ) அமைச்சர் மூலம் (அ) பந்தியில் உள்ள வெற்றிடத்திற்காக மிக விரைவில் ஓர் அங்கத்தவரை நியமிக்க வேண்டும்.

(4) (3) ஆவது உப பிரிவின் கீழ் பதவிக்கு நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவர் அவர் பதில் கடமை காலத்தில் குறையாமல் எஞ்சியுள்ள காலத்திற்கு மாத்திரம் பதவி வகிக்கலாம்.

(5) எவரேனும் ஓர் அங்கத்தவர் நோய் வாய்ப்பட்டாலோ அல்லது இலங்கைக்கு வெளியே வசிப்பதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் ஒரு விடயம் தற்காலிகமாக தொடர்பாக அல்லது அவருடைய பதவியின் கடமைகளைச் செய்வதற்கு தற்காலிகமாக முடியாத சந்தர்ப்பத்தில் அவருக்குப் பதிலாக கடமையினை மேற்கொள்வதற்காக 4 ஆவது மற்றும் 5 ஆவது பிரிவுகளின் ஒழுங்கு விதிகளைக் கவனத்திற் கொண்டு நபர் ஒருவரை அமைச்சர் மூலம் பதவிக்காக நியமிக்கலாம்.

(6) இப்பிரிவுகளில் பூரண ஒழுங்கு விதிகளுக்கு கீழாக ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட ஓர் அங்கத்தவரின் பதவிக்காலம் மூன்று வருடங்கள் ஆவதோடு, ஒழுக்காற்று விடயம் தொடர்பில் பதவியில் இருந்து நீக்கப்பட்டாலே தவிர அவ்வங்கத்தவர் மீண்டும் பதவியில் அமர்த்தப்படுவதற்கு தகுதி உடையவர் ஆவார்.

ஆணைக்குழுவின் கூட்டங்கள்

10. (1) தலைவர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்க வேண்டும். ஏதேனும் ஒரு கூட்டத்திற்கு தலைவரினால் வருகை தர முடியாத விடத்து உப தலைவர் அக்கூட்டத்திற்கு தலைமை வகிக்க வேண்டும்.

(2) (அ) ஆணைக்குழுவின் மூலம் தீர்மானிக்கப்படுகின்ற சகல விடயங்கள் தொடர்பிலும் ஆணைக்குழுவின் கூட்டம் ஒன்றில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதோடு, சமுகம் தந்த வாக்கினை அளிக்கின்ற அங்கத்தவர்களின் பெரும்பாண்மை வாக்குகலால் தீர்மானிக்க வேண்டும்.

(ஆ) கூட்டம் ஒன்றில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் ஒரு பிரச்சினை தொடர்பாக வாக்குகள் சமனான போது தலைமை வகிக்கின்ற அங்கத்தவர் அவருடைய வாக்கினை மேலதிகமான தீர்ப்பு வாக்கினை அளிக்க முடியும்.

(இ) ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அனைத்து விதமான தீர்மானங்களும் எழுத்து மூலம் அறிக்கையிடப்பட வேண்டியதுடன் அதற்கு ஆணைக்குழுவின் இலச்சினை பதிக்கப்பட வேண்டும்.

(3) (அ) ஆணைக்குழுவின் எந்தவொரு அங்கத்தவருக்கும் கூட்டத்தினைக் கூட்டுமாறு தலைவருக்கு எழுத்து மூலமான கோரிக்கை விடுக்க முடிந்ததோடு தலைவர் நியாயமான காரணத்தினால் அன்றி அக்கோரிக்கையினை நிராகரிக்க முடியாது.

(ஆ) 25 ஆவது பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட செயலாளர் மூலம் ஆணைக்குழுவின் அனைத்து கூட்டங்களையும் கூட்ட முடியும்.

(4) ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு இடையே ஏற்படுகின்ற பதவி வெற்றிடங்களின் காணப்படுகின்ற காரணத்தால் அல்லது அதன் உறுப்பினர்களை நியமிப்பதில் ஏனேனும் ஒரு குறைபாடு அல்லது போன்ற விடயங்கள் தொடர்பில் ஆணைக்குழுவின் ஏதேனும் செயற்பாடு அல்லது தீர்வு அல்லது வேலை தடைப்படாது.

(5) ஆணைக்குழுவின் எந்தவொரு கூட்டமாயினும் அங்கத்தவர்கள் இருவர் மூலம் பூரணமாகின்றது.

(6) இப்பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க ஆணைக்குழுவின் கூட்டங்கள் தொடர்பில் மற்றும் அக்கூட்டங்களின் அலுவல்களை நடாத்திக் கொண்டு செல்கின்ற முறை பற்றி செயற்பாடுகள் நடைமுறைகளுக்கு ஏற்ப கட்டளைகளைப் பிறப்பிக்க முடியும்.

11. (1) ஆணைக்குழு அதன் அதிகாரங்களை மேற்கொள்ளும்போது அல்லது செயற்பாடுகள் அல்லது கடமைகளைச் செய்வதற்காக அதற்கு ஒத்துழைக்கக் கூடிய தேவை எனக் கருதுகின்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கையைக் கொண்டதாக பொறுப்புச் சபை தாபிக்கப்படவேண்டும். ஆணைக் குழுவின் பொறுப்புச் சபை.

(2) ஆணைக்குழுவானது அதன் அதிகாரங்களை செயற்பாடுகள் அல்லது கடமைகள் எதனையும் பொறுப்பு வழங்க முடியும். இருப்பினும் பொறுப்புச் சபைக்கு பொறுப்பு அளிக்கப்பட்டுள்ள ஏதேனும் அதிகார செய்பாடுகள் அல்லது கடமைகளை கையளிக்கப்படுவதனை நீக்கிக் கொள்ள முடியாது.

(3) அப்பொறுப்புச் சபையின் எடுக்கப்பட்ட எந்தவொரு தீர்மானத்தினை இரத்துச் செய்வதற்கு அல்லது திருத்தஞ் செய்வதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

12. (1) ஆணைக்குழுவின் சீல் பதிப்பானது ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் அமைய வேண்டும். சீல் பதிப்பு.

(2) ஆணைக்குழுவின் சீல் பதிப்பானது;

(அ) ஆணைக்குழுவின் மூலம் தீர்மானிக்கப்படுகின்ற முறையில் அமைக்கப்பட வேண்டும்.

(ஆ) ஆணைக்குழுவின் மூலம் தீர்மானிக்கப்படுகின்ற நபர் அல்லது நபர்களின் பொறுப்பில் காணப்பட வேண்டும்; மற்றும்

(இ) ஆணைக்குழுவின் அனுமதியின்றி மற்றும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இருவரின் முன்னிலையில் அன்றி எந்தவொரு ஆவணத்திலும் அல்லது தயாரிப்புப் பத்திரத்திலும் அல்லது கையொப்பமிடப்பட வேண்டும்.

(3) ஆணைக்குழு- ஆணைக்குழுவின் சீல் பதிக்கப்பட்ட ஓர் ஆவணத்தை நடாத்திச் செல்ல வேண்டும்.

அங்கத்தவர் களின் ஊதியம்.

13. ஆணைக்குழுவின் தலைவருக்கு மற்றும் ஏனைய அங்கத்தவர்களுக்கு அமைச்சரினால் தென் மாகாண பிரதான செயலாளரின் சிபாரிசின் பேரில் மற்றும் நிதி விடயப் பொறுப்பு மாகாண அமைச்சரின் சம்மதத்துடன் தீர்மானிக்கப்பட்ட அளவு ஊதியம் செலுத்தப்பட வேண்டும்.

ஆணைக்குழு அங்கத்தவர் களின் மற்றும் உத்தியோகத்தர் களின் சத்தியப் பிரமானம்.

14. (1) ஆணைக்குழு அங்கத்தவர்கள் முதல் தடவையாக நியமிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இச்சட்டவாக்கத்தின் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டு உள்ள முறையில் சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் செயலாளர் உட்பட, தலைவர் மூலம் அவ்வாறு நியமிக்கப்படுகின்ற ஆணைக்குழுவின் ஏனைய அங்கத்தவர்கள் கூட அவர்கள் முதல் தடவையாக நியமிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் சத்தியப் பிரமாணம் செய்யப்பட வேண்டும்.

## பகுதி II

## ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்

ஆணைக்குழுவின் அதிகாரங்கள்.

15. (1) ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள் கீழ்வருமாறு காணப்படல் வேண்டும்.

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்கின்ற முறை அவர்களை சேவையில் அமர்த்துதல் தொடர்வில் நியமங்கள் (நிபந்தனைகள்) மற்றும் நிபந்தனைகள் மற்றும் ஊழியர்களை நியமிப்பதற்கு பின்பற்றுகின்ற மூலாதாரங்கள் மற்றும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள ஒரு பதவியில் இருந்து இன்னொரு பதவிக்காக பதவி உயர்த்தப்படும் போது அக்கூட்டுறவு சங்கங்கள் மூலம் பின்பற்றப்பட வேண்டிய மூலாதாரங்கள் தொடர்பான அனைத்து விடயங்களையும் உறுதிப்படுத்தல்;

(ஆ) கூட்டுறவுச் சங்க ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பரீட்சைகளை நடாத்துதல் அல்லது அப்பரீட்சைகளை நடாத்துவதன் பணிக்காக பரீட்சை சபை ஒன்றினை அமைத்தல் மற்றும் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் விண்ணப்பதாரிகளிடம் இருந்து கட்டணம் அறவிடல்;

(இ) அத்தகைய ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு அவசியமான தகமைகளைத் தீர்மானித்தலும், ஏதேனும் வகுப்பில் உள்ள அல்லது தரத்தில் உள்ள ஏதேனும் அத்தகைய பதவிக்கு அல்லது பதவிகளுக்கு உரிய சம்பள அளவுகளை நிர்ணயித்தலும் ஆணையாளரின் கலந்தாலோசனையுடன் காலத்துக்குக்க ாலம் அத்தகைய சம்பள அளவுகளை மீளாய்வு செய்தல் அல்லது சீராக்கதல் அத்துடன் கூட்டுறவு ஊழியர்களின் வேதனத்தையும் சேவை நிபந்தனைகளையும் தீர்மானிப்பதில் உதவுவதற்கு அவசியமானதென ஆணைக்குழு கருதக் கூடியவாறான அத்தகயை உசாத்துணை அமைப்பைத் தாபித்தல்;

(ஈ) கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் ஊழியம் மற்றும் சேவை நிபந்தனைகளை உறுதிப்படுத்தும் போது அவற்றிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஆணைக்குழு தேவை என கருதும் பட்சத்தில் ஆலோசனைக் குழுவினை அமைத்தல்;

(உ) எந்தவொரு வகுப்பின் அல்லது தரத்தின் பதவிக்காக அல்லது பதவிகளுக்கு ஆணைக்குழுவின் மூலம் நிர்ணயிக்கப்படுகின்ற சம்பள அளவுத் திட்டத்திற்கு ஏற்ப சம்பளத்தினை வழங்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கட்டளை பிறப்பித்தல்;

(ஊ) அதன் ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் அதன் உரிமைகளைப் பிரயோகிக்கையில் ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையை அல்லது நடவடிக்கை முறைகளைத் தீர்மானித்தல், ஆணைக்குழு மூலம் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள்ளாக அதன் ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்தி முடிக்குமாறு

ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தை வேண்டுதல், அத்துடன் ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுக்காற்றுக் கட்டளைகள் வாயிலாக எழும் மேன்முறையீடுகளை விசாரித்தல்;

(எ) விதிக்கப்பட்டு உள்ள மாதிரிப் படிவங்களுக்கு இணங்க ஏதேனும் அக்கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் தொடர்பிலான விதித்துரைக்கப்பட்ட பதிவேடுகளை வைத்திருக்குமாறு அச்சங்கத்தைக் கோருதல்;

(ஏ) ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்கள் தொடர்பில் ஆணைக்குழு தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய கோப்புக்கள், வேறு ஆவணங்கள் அல்லது தகவல் என்பவற்றைக் குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதிக்கு முன்னர் கொடுத்து உதவுமாறு ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்திற்கு உரித்தாக்கல்;

(ஐ) அத்தகைய குழாத்துக்கு அல்லது குழாங்களுக்கு ஆணைக்குழுவினால் ஆற்றுப்படுத்தப்பட்ட மேன்முறையீடுகளின் மீது அவசியமாகக் கூடியவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்வதற்கான அலுவலர்களின் குழாத்தை அல்லது குழாம்களை பெயர் குறித்து நிமித்தலும் அதன் மீது ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடுதலும் கோப்புக்கள்;

(ஒ) ஊழியர்களின் விசாரணையின் விடயப் பொருளாக இருந்து சங்கத்தின் முடிவுக்கு எதிராக ஊழியர்கள் ஆணைக்குழுவுக்கு மேன் முறையீடு செய்துள்ள விடத்து அத்தகைய சங்கத்தின் எவரேனும் ஊழியர்கள் தொடர்பில் ஆணைக்குழுவினால் கொடுக்கப்படக்கூடியவாறான மீளத் தொழிலுக்கு அமர்த்துதல் தொடர்பிலான அறிவுறுத்தல்கள் உட்பட அத்தகைய அறிவுறுத்தல்களை நிறைவேற்றுமாறு அத்தகைய சங்கத்தை தேவைப்படுத்துதல்;

(ஓ) ஊழியர்களுக்கு அவர்களது சேவைகள் முடிவுறுத்தப்படுவதன் மீது வழங்கப்படக் கூடிய பணிக்கொடை அல்லது வேறு நன்மைகள் கொடுக்கப்படும் பொதுக் கோட்பாடுகளைத் தீர்மானித்தல்;

(ஔ) இந்நியதிச் சட்டத்தின் தொழிற்பாட்டில் இருந்து ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தை அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் வகுப்பை விலக்கி விடுவது தொடர்பில் மாகாண ஆணையாளரின் கலந்தாலோசனையுடன் அமைச்சருக்கு ஆலோசனை அளித்தல்;

(க) ஆணைக்குழுவுக்கு அவசியம் எனக் கருதப்படுகின்ற நிபந்தனைகள் ஏதேனும் ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு அல்லது அக்கூட்டுறவுச் சங்க ஊழியருக்கு அல்லது பெற்றுக் கொடுத்தல், மற்றும்;

(கா) இந் நியதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் மேற்பட்ட கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் இடமாற்றத்திற்கு எதிராக ஆணைக்குழுவிற்கு செய்யப்படுகின்ற மேன்முறையீட்டினை விசாரணைகளுக்குப் பின்னர் ஆணைக்குழு மூலம் வழங்கப்படக்கூடிய ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய கூட்டுறவுச் சங்கத்திற்கு உரித்தாக்கல்;

(2) (1) ஆம் உப பிரிவின் மூலம் ஆணைக்குழுவுக்க வழங்கப்பட்டு உள்ள அதிகாரங்களை/தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அல்லது நடைமுறைப்படுத்தும் போது ஆணைக்குழு மூலம் மேற்கொள்ளப்பட்ட எவையேனும் முடிவுகளை அல்லது தீர்மானங்களை திரிவுபடுத்தலாம். வேறுபடுத்தலாம், மீளாய்வு செய்யலாம் அல்லது தள்ளி வைப்பதற்கு அனுமதி உள்ளது.

## பகுதி III

### கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அதன் ஊழியர்கள்

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அதன் ஊழியர்கள் ஆணைக்குழுவின் பணிப்புக்கு அமைந்தவர்களாதல்.

16. (1) ஏதேனும் கூட்டுறவுச் சங்கமும் அச்சங்கத்தின் எவரேனும் ஊழியரும் இந்நியதிச் சட்டத்தின் 15 ஆவது பிரிவின் கீழ் ஆணைக்குழுவின் மூலம் கொடுக்கப்படக் கூடிய அத்தகைய பணிப்புகளுக்கு அமைதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் பரிசோதனைக்கு அல்லது சட்டபூர்வமான தேவையின் போது ஆஜராக வேண்டியதுடன் அவ்வாறு தோன்றி நிற்பதற்கு கிடைக்காத கூட்டுறவுச் சங்க ஊழியர் ஆணைக்குழு மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சோதனைக்கு தோற்ற வேண்டும்.

ஆணைக்குழுவின் பணிப்புகள் கூட்டுறவுச் சங்க ஊழியர்களைப் பிணிப்பதாதல் வேண்டும்.

17. இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதன் கீழான பணிகளையும் தத்துவங்களையும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் ஆணைக்குழுவின் எல்லா முடிவுகளும் இறுதியானவையாதல் வேண்டும் என்பதுடன் தொழிற்பாட்டில் இருந்து விலக்களிக்கப்படாதனவாக அத்தகைய எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களையும் அச்சங்கங்களின் ஊழியர்களையும் பிணிப்பதாதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் சம்பளங்கள்

18. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் அதன் நிதியில் இருந்து அதன் ஊழியர்களுக்கு சம்பளங்கள் மற்றும் ஏனைய படிகள் எவையேனும் இருப்பின் அவற்றைச் செலுத்துதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்க ஊழியர்களை இடமாற்றம் செய்தல்.

19. (1) ஒரு கூட்டுறவுச் சங்கமானது, அச்சங்கத்தின் ஊழியர் எவரையும் அதன் வேலைத் தலங்களில் ஏதேனும் ஒன்றில் இருந்து அதன் வேலைத் தலங்களுள் வேறொன்றுக்கு இடமாற்றம் செய்வதற்கு தத்துவம் கொண்ட இடமாற்றம் செய்யப்பட்டவிடத்து, அத்தகைய இடமாற்றமானது அத்தகைய ஊழியர்களின் வேதனாதிகளைப் பங்கமாக பாதித்தலாகாது.

(2) ஒத்த தரத்திலான பதவிகளை வகிக்கின்ற இரு ஊழியர்களினதும் கூட்டு வேண்டுகோளின் பேரில், ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் எவரேனும் ஊழியரை வேறொரு கூட்டுறவுச் சங்கத்திற்கு அப்பின்னைய சங்கத்தின் ஊழியர் ஒருவராக இடமாற்றம் செய்வதற்கு ஆணைக்குழு தத்துவம் கொண்டதாதல் வேண்டும். ஆயின் முறையே அந்தந்தத் தொழில் தருநர்களின் ஒருப்பாடு ஏற்கனவே பெறப்பட்டு இருத்தல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்க ஊழியர்களை வேலையில் இருந்து நீக்குதலும் தண்டனை கொடுத்தலும்

20. (1) கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர் எவரும் இந்நியதிச் சட்டத்தின் அல்லது அதன் கீழாக்கப்படும் எவையேனும் ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தவிர, ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் இடை நிறுத்தப்படுதல். வேலையில் இருந்து நீக்கப்படுதல், அல்லது வேறு வகையாகத் தண்டிக்கப்படுதல் ஆகாது.

(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எதுவும் நியமித்த தேதி அன்று அதன் ஊழியர்களுள் எவருக்கும் எதிராக அத்தேதிக்கு முன்னர் சம்பவித்த அல்லது எழுந்த ஏதேனும் துர்நடத்தை அல்லது ஒழுக்காற்று மீறுகை அல்லது வேறு ஏதேனும் முறைப்பாடு காரணமாக அத்தகைய ஏற்பாடுகளுக்கு இணங்க வழக்கு நடவடிக்கைகளைத் தொடங்குவதோ அல்லது முடிவுறாதிருக்கும் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளை அத்தகைய ஏற்பாடுகளுக்கு இணங்க இயலக் கூடிய வரை தொடர்ந்து முடிப்பதோ, கூட்டுறவுச் சங்கம் எதற்கும் சட்ட விரோதமாக்குவதாகக் கருதப்படல் ஆகாது.

21. (1) கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைச்சரின் நிதிப் பிரமாணத்தில் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணத் தொகையிலும் கூடுதலான பணத்தொகை ஒன்றைப் பிணைப் பொறுப்பு வகையாகக் கொடுத்து உதவுமாறு எவரேனும் ஊழியரைத் தேவைப்படுத்தல் ஆகாது. — கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் மூலம் வழங்கப் படுகின்ற பிணைப் பொறுப்புக் கொடுத்து உதவுதல்.

(2) (1) ஆவது பிரிவின் கீழ் கூட்டுறவுச் சங்கத்தின் எவரேனும் ஓர் ஊழியர் மூலம் கொடுத்து உதவப்பட்ட ஏதேனும் காசுப் பிணைப் பொறுப்பு சங்கத்தின் பெயரில் வங்கி ஒன்றில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் அதன் மீது திரளும் ஏதேனும் வட்டி அவ்வூழியருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

22. (1) கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொன்றும்; — ஊழியர்கள் தொடர்பில் கூட்டுறவுச் சங்கத்துக்கு உள்ள கடமைகள்.

(அ) அதன் ஊழியர் ஒவ்வொருவர் தொடர்பிலும் விதித்துரைக்கப்பட்ட இடாப்புக்களையும் பதிவேடுகளையும் வைத்து இருந்து பேணி வருதல் வேண்டும் என்பதுடன் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஒவ்வொரு ஊழியர் தொடர்பிலானதும் அத்தகைய விவரங்கள் எல்லாவற்றையும் அவற்றின் கண் பதிதலும் வேண்டும்.

(ஆ) அதன் ஊழியர்கள் தொடர்பில் விதித்துரைக்கப்படக் கூடியவாறான விவரத் திரட்டுக்களை அல்லது அறிக்கைகளை அல்லது ஆணைக்குழு காலத்துக்குக் காலம் தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய தகவலை ஆணைக்குழுவுக்கு கொடுத்து உதவுதல் வேண்டும். அத்துடன்

(இ) அதன் சார்பில் அதிகாரம் அளிக்கப்பட்ட ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது சேவையாள் அதன் அலுவலகங்களுள் அதனுள்ளும் நுழைவதற்கும் அதன் கண் வைத்திருக்கப் படும் எவையேனும் புத்தகங்கள், கணக்குகள், பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகளை எடுப்பதற்கும் அனுமதி வழங்குவது ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களும் மேற்கொள்ள வேண்டும்.

23. தொழில் தருநராக இருக்கின்ற ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் அச்சங்கத்தின் ஒவ்வோர் ஊழியரும் சட்டத்தினால் தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய தொகைகளைக் காலந்தோறும் ஊழிய சகாய நிதியத்துக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கும் உதவு தொகையாகச் செலுத்துதல் வேண்டும். — ஊழிய சகாய நிதியமும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமும்.

24. இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படி இருப்பினும் ஒரு கூட்டுறவுச் சங்கமானது அதன் திறமையான செயற்பாட்டை மனதிற் கொண்டு; — ஒப்பந்த, அமைய அல்லது நாட் சம்பள ஊழியர் களை ஈடு படுத்துதல்.

(அ) ஆணைக் குழுவின் முன் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு நிபுணர் ஒருவரின் அல்லது எவரேனும் சிறப்பு அறிஞரின் சேவைகளைப் பெறலாம் அல்லது

(ஆ) அமய அல்லது நாட் சம்பள ஊழியர்களை ஈடுபடுத்தலாம் அல்லது துண்டு வேலை அடிப்படையில் ஊழியர்களை ஈடுபடுத்தலாம்.

ஆயினும் எவ்வாறாயினும், ஆணைக்குழுவின் ஒருப்பாடு இல்லாமல் 30 நாட்களுக்கு மேற்படாத காலத்திற்கு அத்தகைய ஊழியர்களுக்கு பதவி நிரந்தரம் எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

## பகுதி IV

### ஆணைக்குழுச் செயலாளர் மற்றும் பணிக்குழு

25. ஆணைக்குழுவுக்கு ஆணையாளர் ஒருவர் காணப்பட வேண்டியதுடன், அவர் இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தராக இருக்க வேண்டும். — ஆணைக்குழுச் செயலாளர்.

## பகுதி V

### நிதி

அடிப்படை ஒழுங்கு விதிகள்.

26. ஆணைக்குழுவின் செலவினங்கள் தென் மாகாண சபையின் வருடாந்த நிதி ஒதுக்கீட்டின் செயற் பணிகளுக்காக வழங்கப்படுகின்ற நிதி மூலம் செலுத்தப்பட வேண்டும்.

ஆணைக்குழு கணக்குகளை நடாத்திச் செல்லப்பட வேண்டும் என.

27. ஆணைக்குழுவிற்கு பொறுத்தம் எனக் கருதுகின்ற எந்தவொரு வங்கியிலாயினும் ஒரு கணக்கினை ஆரம்பித்து நடாத்திச் செல்ல முடியுமாவதோடு, அக்கணக்கு மாகாண சபையின் அடிப்படைக் கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நிதி ஆண்டு மற்றும் கணக்காய்வு.

28. (1) ஆணைக்குழுவின் நிதி வருடமே நிதி ஆண்டு எனக் கருதப்படும்.

(2) ஆணைக்குழுவின் வருமானங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் ஏனைய அனைத்து விதமான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் உரிய கணக்குப் பதிவேடுகளைப் பேணுவதற்கான செயற்திட்டங்களை ஆணைக்குழு மேற் கொள்ள வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் நிதி செயற்பாடுகள் மற்றும் நிதி நிலைமைகள் தொடர்பாக உண்மையாக மற்றும் நியாயமாக ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

(4) மாகாண சபையின் நிதி ஒழுங்கு விதிகளுக்கு இணங்க கணக்காய்வு செய்வதற்கு உரிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் ஒழுங்கு விதிகள் ஆணைக்குழுவின் கணக்ககுளை கணக்காய்வுகள் தொடர்பில் உரித்தாகும்.

நிதியினை முதலீடு செய்தல்.

29. மாகாண அமைச்சரின் அனுமதியுடன் மற்றும் நிதி விடயப் பொறுப்பு அமைச்சரின் உடன்பாட்டுடன் கூடிய ஆணைக்குழுச் சபைக்கு உரிய நிதி அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட සුරැකුම්පත්වල மூலம் முதலீடு செய்யப்படல் வேண்டும்.

கடன்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் ஆணைக்குழுவின் அதிகாரங்கள்.

30. (1) அமைச்சரின் மற்றும் நிதி விடயப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ள மாகாண அமைச்சரின் எழுத்து மூலமான உடன்பாட்டுடன் கூடிய வழங்கப்பட்டுள்ள பொது அதிகார சபையின் விதந்துரைகளுக்கு இணங்க மற்றும் ஆணைக்குழுவின் ஏதாவது வை செலுத்துவதற்காக அவசியமான நிதித் தொகையினை கடனாகப் பெறுவதற்கோ அல்லது கடனை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு ஆணைக்குழுவுக்கு முடியும்.

(2) இப்பிரிவின் கீழ், ஆணைக்குழு சேகரித்துக் கொண்ட ஏதாவது ஒரு கடன் தொகை தொடர்பில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அட்டுறுவாகக் காணப்படுகின்ற தொகையானது அமைச்சரால் தீர்மானிக்கப்படுகின்ற தொகையினை விட மேற்படாமல் இருக்க வேண்டும்.

## பகுதி VI

### பல்லினமானவை

அமைச்சருக்கு ஆணைகளைப் பிறப்பிக்கக் கூடும் என்பது.

31. (1) அமைச்சர் கட்டளை மூலம் ஆணைக்குழுவுக்கு அதன் அதிகாரங்கள் மற்றும் அவற்றை நிறைவேற்றுவது தொடர்பில் எழுத்து மூலமான சாதாரண மற்றும் விஷேட கட்டளைகளை அடிக்கொரு தடவை வெளியிடக் கூடியதோடு, அக்கட்டளைகளை நடைமுறைப்படுத்துவது ஆணைக்குழுவின் கடமையும் ஆகும்.

(2) ஆணைக்குழுவின் பணிகளுக்கு உரிய அறிக்கைகள், கணக்குகள் அல்லது வேறு ஏதேனும் தகவல்களை அவர் பிறப்பிக்கின்ற மாதிரிப் படிவங்களின் முறையில் அவருக்கு முன்வைக்கப்பட வேண்டும் என ஆணைக்குழுவுக்கு அமைச்சர் மூலம் கட்டளை பிறப்பிக்கக் கூடியதோடு, இக்கட்டளைகளை அக்கட்டளைகளை நடைமுறைப்படுத்துவது ஆணைக்குழுவின் கடமையும் ஆகும்.

31. (1) ஆணைக்குழுவானது ஒரு நிதியாண்டு முடிவடைந்து ஆறு மாதங்களுக்குள் அந்நிதியாண்டுக்குள் ஆணைக்குழு மூலம் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த அறிக்கை ஒன்று அமைச்சருக்கு முன் வைக்கப்பட வேண்டியதுடன், அவ்வாண்டிற்கு உரிய கீழ்க் காணப்படும் ஆவணங்களின் ஒரு பிரதி மூலம் அவ்வறிக்கையில் இணைக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(அ) வருடத்திற்காக ஆணைக்குழுவின் மூலம் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு;

(ஆ) அவ்வறிக்கைகள் மற்றும் கணக்கு உரித்தான ஆண்டிற்கு அடுத்து வரும் ஆண்டுகளுக்கும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான அறிக்கை ஒன்று.

(2) (1) ஆவது உப பிரிவின் கீழ் முன்வைக்கப்பட்ட அறிக்கை மற்றும் ஆவணங்களின் பிரதிகள் அவ்வறிக்கை கிடைக்கப் பெற்ற தேதி தொடக்கம் ஆறு (06) மாதங்களுக்குள் அமைச்சரினால் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

33. ஆணைக்குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும், உத்தியோகத்தரும், ஊழியரும் தத்தமது கடமைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்நியதிச் சட்டத்தின் கீழான தன்னுடைய அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகளை நடைமுறைப்படுத்தும் போது மற்றும் செயற்படும் போது அவர் ஆணைக்குழு தொடர்பில் தெரிந்து வைத்துள்ள அனைத்து விதமான அலுவல்களுக்கும் உரிய விடயங்கள் தொடர்பில் இரகசியத் தன்மையினைப் பாதுகாப்பதாக உறுதிமொழி வழங்கி கையொப்பமிடப்பட வேண்டியதுடன் அப்பிரகடனத்தின் மூலம் கீழ்க் காணப்படும் விடயங்கள் தவிர வேறு விடயங்களை செய்ய மாட்டேன் என வாக்குறுதி வழங்கப்பட வேண்டும். இரகசியத் தன்மை.

(அ) அவ்வாறு செய்வதற்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து இருந்தால், அல்லது;

(ஆ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுந்து முறையிலான சட்டத்தின் கீழான அதிகாரம் செயற்பாடு மற்றும் எண்ணக்கரு என்பவற்றை நடைமுறைப்படுத்தும் போது அல்லது நிறைவேற்றப்படும் கருமம் தொடர்பாக.

34. (1) ஆணைக்குழுவின் எழுத்து மூலம் மற்றும் அதில் உரித்தாக்கப்பட்டு உள்ள நிபந்தனைகளின் கீழ் ஆணைக்குழுவின் எவரேனும் ஒரு உத்தியோகத்தருக்கு அதன் அதிகாரக் கடப்பாடுகள் மற்றும் கடமைகளில் எதையேனும் கையளிக்கக் கூடியதோ, அவ்வாறு ஒரு உத்தியோகத்தர் அவ் அதிகாரக் கடப்பாடுகள் மற்றும் கடமைகள் ஆணைக்குழுவின் பெயரில் மற்றும் ஆணைக்குழுவுக்காக நடைமுறைப்படுத்தல் அல்லது மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஆணைக்குழுவின் அதிகாரங்களை கையளித்தல்.

(2) (1) ஆம் உப பிரிவின் கீழ் ஏதேனும் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டு இருப்பினும் ஆணைக்குழு அவ்வாறு கையளிக்கப் படுகின்ற ஏதேனும் அதிகாரங்கள், செயற்பாடுகள் அல்லது மேற்கொள்ளக் கூடியதோடு, எந்த சந்தர்ப்பத்திலும் அதிகாரங்களை இரத்துச் செய்ய முடியும்.

35. ஆணைக்குழுவின் செயலாளர் உட்பட உத்தியோகத்தர்களும் மற்றும் ஊழியர்களும் குற்றவியல் தடுப்புச் சட்டத்தின் பொருள் கோடலுக்கு இணங்க மற்றும் அச்செயற்பாடுகள் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களாகக் கருதப்பட வேண்டும். ஆணைக்குழுவின் உத்தியோகத்தர் கள் மற்றும் ஊழியர்கள் அரச உத்தி யோகத்தர் களாக கருதப் படல் வேண்டும்.

36. ஆணைக்குழுவின் இலஞ்ச சட்டத்தின் பொருட் கோடல் மற்றும் செயற்பாடுகளுக்காக உப அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாக கருதப்பட வேண்டியதோடு, அச்சட்டத்தின் ஒழுங்கு விதிகள் அதற்கு இணங்க கொள்ளப்படல் வேண்டும். ஆணைக்குழுவின் உப அட்டவணை படுத்தப்பட்ட நிறுவனமாக கருதப்பட வேண்டும்.

ஒழுங்கு விதிகள்

37. (1) இந்நியதிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளை உருவாக்குவது தொடர்பில் ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் அல்லது அது தொடர்பான ஒழுங்கு விதிகளை உருவாக்குவதற்காக இந்நியதிச் சட்டத்தின் அதிகாரம் வழங்கப்பட்டு உள்ள விடயங்கள் தொடர்பில் அமைச்சரினால் ஒழுங்கு விதிகளை உருவாக்க முடியும்.

(2) (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டு உள்ள அதிகாரங்கள் பொதுவான பெறுமானம் இல்லாத விதத்திலும் அமைச்சருக்கு ஆணைக்குழு விசாரணை செய்து கீழ்க் காணப்படும் அனைத்து விடயங்கள் அல்லது எந்தவொரு விடயம் தொடர்பிலும் பரிமாணங்களைத் தயாரிக்க முடியும்.

(அ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அறவிடக் கூடிய கட்டணங்கள்;

(ஆ) 15 (எ) பிரிவின் கீழ் நடாத்திச் செல்ல வேண்டியதோடு கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் தொடர்பிலான ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் ;

(இ) கூட்டுறவுச் சங்கத்தின் ஏதேனும் ஓர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்காக நடாத்திச் செல்லப்படுவதற்காக உரித்தாக்கப்பட்டு உள்ள வசித்தல் தொடர்பான தகைமைகள் ;

(ஈ) கூட்டுறவுச் சங்க ஊழியர் மூலம் முன்வைக்கப்பட்ட பிணைத் தொகையின் அளவு;

(உ) கூட்டுறவுச் சங்க ஊழியராக நியமிக்கும்போது பரீட்சை நடாத்துதல்;

(ஊ) கூட்டுறவுச் சங்க ஊழியர்களை பதவிக்காக நியமித்தல், நியமனம் தொடர்பான நடைமுறைகள் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றங்கள், பதவி விலகல் மற்றும் சேவை;

(எ) அவ்வூழியர்களின் சேவை நியமனம் மற்றும் நிபந்தனைகள் மற்றும் சம்பள அளவுத் திட்டம், சலுகைகள் மற்றும் பணிக்கொடைகள் முற்பணங்கள், பதவி உயர்வு, விடுமுறை வழங்கல், ஊழியர்களின் சேவை நிறுத்தம், சேவையில் இருந்து தரக் குறைப்பு அல்லது அவ்வூழியர்களுக்கு வேறு விதத்தில் தண்டனைக்கு உட்படுத்தல் மற்றம் அவற்றோடு தொடர்பான மேன்முறையீடுகள்;

(ஏ) அவசியம் எனக் கருதப்படுகின்ற ஊழியர்களின் சேவைகள் நியமங்கள் அல்லது நிபந்தனைகளுக்கு உரிய வேறு விடயங்கள்.

(3) அமைச்சர் மூலம் தயாரிக்கப்படுகின்ற ஒவ்வொரு ஒழுங்கு விதிகளும் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் அல்லது உரித்தாக்கப்படக்கூடிய அடுத்த தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

(4) (அ) அமைச்சரினால் தயார்படுத்தப்பட்ட அனைத்து ஒழுங்கு விதிகள் மற்றும் அவற்றை வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, 06 மாதத்திற்குள் அனுமதிக்காக மாகாண சபைக்கு முன் வைக்கப்பட வேண்டும்;

(ஆ) அவ்வாறு அனுமதிக்கப்படாத ஏதேனும் ஒழுங்கு விதி ஒன்றினை அதன் கீழ் ஏற்கனவே செய்யப்பட்டவைகள் தொடர்பில் எந்தவொரு பாதிப்பும் ஏற்படாத விதத்தில் அவ்வாறு அனுமதிக்கப்படாத தினத்தில் இருந்து இரத்துச் செய்யப்படல் வேண்டும் என்பதனை கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) அவ்வாறு அமைச்சரினால் ஆக்கப்படுகின்ற ஏதேனும் ஒரு பிரமாணம் அவ்வாறு இரத்துச் செய்யப்பட்டது எனக் கருதப்பட்ட திகதியினை வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படல் வேண்டும்.

சட்ட திட்டங்கள் உருவாக்குவது தொடர்பில் ஆணைக் குழுவுக்கு உள்ள அதிகாரங்கள்.

38. (1) கீழ்க் காணப்படும் விடயங்கள் அனைத்தும் அல்லது ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் ஆணைக் குழுவுக்கு சட்ட வரையறைகளை ஆக்கலாம்.

(அ) இந்தியதிச் சட்டத்தில் ஏதேனும் ஒரு ஒழுங்கு விதிகளின் கீழ் சட்ட விதிகளை உருவாக்குவதற்கு ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டு உள்ள அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில்,

(ஆ) ஆணைக்குழுவின் கூட்டங்கள் மற்றும் அக்கூட்டங்களில் பின்பற்றக் கூடிய செயன்முறைகள் ;

(இ) ஆணைக்குழுவின் அலுவல்களுக்கு உரிய ஏதேனும் வேறு விடயங்கள் தொடர்பில்,

(2) ஆணைக்குழுவினால் உரிவாக்கப்பட்ட அனைத்து ஒழுங்கு விதிகளும் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட வேண்டும்.

39. (1) ஏதேனும் ஒரு கூட்டுறவுச் சங்கம் அல்லது குழு - குழுவின் உறுப்பினர் அல்லது ஊழியர் ; தவறுகள் மற்றும் தண்டனைகள்.

(அ) இந்தியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறினால், அல்லது;

(ஆ) ஆணைக்குழுவினால் செய்யப்பட வேண்டும் என தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது ஆணக்குழுவின் மூலம் அல்லது முறையாக அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு ஆளினால் இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவலைக் கொடுத்து உதவுவதற்கு வேண்டும் என்று அசட்டை செய்தால், மறுத்தால் அல்லது தவறினால், அல்லது ;

(இ) பொய்யான விவரத் திரட்டை ஆக்கினால் அல்லது பொய்யான தகவலைக் கொடுத்து உதவினால்;

(ஈ) ஏதேனும் சாதாரண அல்லது சட்ட ரீதியான ஒப்பந்தம் இன்றி இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழான ஆக்கப்பட்ட பிரமாணங்களின் கீழ் தன்னுடைய அதிகாரத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு செயற்படுகின்ற எவரேனும் ஒரு நபருக்கு தடைகளை ஏற்படுத்துவதாயின்;

(உ) இந்நியதிச் சட்டத்தின் அத்தியட்சக அதிகாரத்தின் கீழ் செயற்பாட்டின் இந்நியதிச் சட்டத்தின் கீழான அதிகாரங்கள் செயற்பாடுகள் அல்லது எண்ணக்கருக்களை நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு இடையில் மன அமுத்தத்துடன் அல்லது விரக்தி அடைந்து ஆத்திரம் கொண்டு நடந்து கொள்வதாயின்;

(ஊ) இந்நியதிச் சட்டத்தின் அல்லது அதன் கீழாக உருவாக்கப்பட்ட ஏதேனும் ஒரு பிரமாணத்தின் ஒரு ஒழுங்கு விதியையேனும் மீறினால் அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் அவருக்கு சாட்டப்படுகின்ற ஏதும் ஓர் நியமங்களுக்கு உட்பட்டு செயற்படுவதற்கு தவறுகின்ற பட்சத்தில் அல்லது அவ்வூழியர்கள் இந்நியதிச் சட்டத்தின் கீழ் தவறு ஒன்றினைச் செய்தால்,

(2) (1) ஆம் பிரிவிற்கு குறியீடு செய்யப்பட்ட ஏதேனும் தவறைப் புரிகின்ற ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் அல்லது ஆளும் நீதவான் ஒருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதாயின், இருபதாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணத்துக்கு அல்லது சிறைத் தண்டனை போன்ற இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(3) இந்நியதிச் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் புரியப்பட்ட விடத்து, அச்சங்கத்தின் ஒவ்வொரு அலுவலரும், அத்தவறு தமது அறிவு இல்லாமல் புரியப்பட்டது என அல்லது அத்தவறு புரியப்படுதலைத் தடுப்பதற்கும் தம்மால் இயன்ற விழிப்புக் கவனம் எல்லாவற்றையும் தாம் பிரயோகித்தார் என எண்பித்தால் ஒழிய அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எவரேனும் ஊழியரை வேலைக்கு அமர்த்துமாறு தேவைப்படுத்தி ஆணைக்குழுவினால் கொடுக்கப்பட்ட எவையேனும் அத்தகைய அறிவுறுத்துரைகளை அல்லது கட்டளையை நிறைவேற்றத் தவறியமைக்காக ஏதேனும் கூட்டுறவுச் சங்கம் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதன் மீது அத்தகைய கூட்டுறவுச் சங்கமானது;

(அ) (2) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய கூட்டுறவுச் சங்கத்தின் மீது விதிக்கப்படக் கூடிய ஏதேனும் தண்டனையுடன் மேலதிகமாக, குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதன் பின்னர் அத்தவறுகை தொடரப்படும் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாய் குற்றப் பணத்துக்கு ஆளாதலும் வேண்டும். அத்துடன்,

(ஆ) ஆணைக்குழுவின் அறிவுறுத்துரைகளுக்கு இணங்க சேவையில் மீளத் தொழிலுக்கு அமர்த்தப்பட்டு இருக்க வேண்டிய தேதியன்றில் இருந்து தொடங்கி அத்தகைய கூட்டுறவுச் சங்கம் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்ட தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது ஒவ்வொரு நாளுக்கும் அவரது சேவைகள் முடிவுறுத்தப்பட்டு இல்லாவிட்டால் அவர் உரித்துடையவராக இருந்திக்கக் கூடிய சம்பளத்தின் அல்லது கூலிகளின் வீதத்தில் கணக்கிடப்பட்ட வேதனத்தினை அத்தகைய ஊழியருக்குக் கொடுத்தல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் (ஆ) ஆம் பந்தியில் கீழ் கூட்டுறவுச் சங்கம் கொடுப்பதற்கு பொறுப்பு உடையதாக உள்ள ஏதேனும் பணத் தொகை எந்நீதிமன்றத்தினால் அது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதோ அந் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப் பணம் ஒன்று என்றாற் போன்று நீதிமன்றக் கட்டளை மூலம் அறவிடப்படலாம். அத்துடன் அவ்வாறு அறவிடப்பட்ட தொகை ஊழியருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் அலுவல்களில் தலையிடல்

40. ஆள் ஒவ்வொருவரும் தமது கடமையின்போது தவிர, வேறு வகையாக நேரடியாகவோ, மறைமுகமாகவோ, தாமாகவோ வேறு எவரேனும் ஆள் மூலமாகவோ எத்தன்மைத்தான எம்முறையிலேனும் ஆணைக்குழுவின் ஏதேனும் முடிவை அல்லது அதன் எவரேனும் உறுப்பினரைச் செல்வாக்குக்கு உட்படுத்துகின்ற அல்லது செல்வாக்குக்கு உட்படுத்த முனைகின்ற அத்தகைய ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவான் ஒருவர் முன்னரான சுருக்க விசாரணையின் பின்னர் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதன் பின்னர் அவர் இருபதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணத்துக்கு அல்லது சிறைத் தண்டனை போன்ற இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

அதிகாரம் அளிக் கப்படாமல் தகவலை வெளியிடல் தடுக்கப்பட்டு உள்ளது.

41. ஆணைக்குழுவின் உறுப்பினர் எவரும் அல்லது ஆணைக்குழுவின் செயலாளர் அல்லது ஆணைக்குழுவின் பணியாட் தொகுதி உறுப்பினர் எவரும் அல்லது வேறு ஆள் எவரும் தமது அலுவலகப் பணிகளைப் பிரயோகிக்கும் போது அவரது அறிவுக்கு எட்டிய எத்தன்மைத்தான ஆவணம், கடிதத் தொடர்பு அல்லது தகவல் எதனதும் உள்ளடங்களை வெளியிடுதலோ ஆள் எவருக்கும் வெளிவிடுதலோ ஆகாது.

ஆணைக்குழுவின் உறுப்பினர் எவரும் அல்லது ஆணைக்குழுவின் செயலாளர் அல்லது ஆணைக்குழுவின் பணியாட் தொகுதி உறுப்பினர் எவரும் அல்லது வேறு ஆள் எவரும் தமது அலுவலகப் பணிகளைப் பிரயோகிக்கும் போது அவரது அறிவுக்கு எட்டிய எத்தன்மைத்தான ஆவணம், கடிதத் தொடர்பு அல்லது தகவல் எதனதும் உள்ளடங்களை வெளியிடுதலோ ஆள் எவருக்கும் வெளிவிடுதலோ ஆகாது.

இரத்துச் செய்தல் மற்றும் சேமித்தல்.

42. (1) 1998 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்கங் கொண்ட தென் மாகாண சபையின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நியதிச் சட்டங்களை இத்தால் மூலம் இரத்துச் செய்யப்படுகின்றது.

(2) மேலே குறிப்பிடப்பட்ட நியதிச் சட்டத்தினை இரத்துச் செய்தலை கருத்திற் கொள்ளப்படாமல்,

(அ) இரத்துச் செய்யப்பட்ட நியதிச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படுகின்ற மற்றும் இந்நியதிச் சட்டம் நடைமுறையாகின்ற முன்னைய தேதிக்கு அதிகாரத்தில் உள்ள அனைத்து பிரமாணங்கள், அறிவித்தல்கள், கட்டளைகள், ஒழுங்கு விதிகள் அல்லது வழிகாட்டல்கள் மற்றும் வெளியிடப் பட்டுள்ள நியமங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள தேவைப்பாடுகளை உறுதிப்படுத்தல் அல்லது கையளித்தல்கள் இந்நியதிச் சட்டத்தின் கீழ் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப வெளியிடப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட பிரமாணங்கள், அறிவித்தல்கள், கட்டளைகள், ஒழுங்கு விதிகள் அல்லது வழிகாட்டல்கள் மற்றும் வெளியிடப்பட்டுள்ள நியமங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள தேவைப்பாடுகளை உறுதிப்படுத்தல் அல்லது கையளித்தல்கள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்;

(ஆ) இந்நியதிச் சட்டம் நடைமுறையாகின்ற தேதிக்கு முன் தினம் அந்நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு சொந்தமான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் இந்நியதிச் சட்டம் நடைமுறையாகும் திகதி தொடக்கம் நடைமுறையாகும் விதத்தில் இந்நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்படுவதோடு, அதன் சொத்துக்களாக கருதப்பட வேண்டும்.

(இ) இந்நியதிச் சட்டம் நடைமுறையாகும் திகதிக்கு பூரணமாகாத மற்றும் இரத்துச் செய்யப்பட்ட நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு மூலம் அல்லது அதற்கு முரணாக தொடுக்கப்பட்டு உள்ள ஏதேனும் ஒரு வழக்கு, முறைப்பாடு, சட்ட செயற்பாடுகள், விழாக்கள், விடயம் அல்லது ஏதேனும் ஒன்று இந்நியதிச் சட்டம் நடைமுறையாகின்ற விதத்தில் இந்நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்க ஊழியர் ஆணைக்குழு மூலம் அல்லது அதற்கு எதிராக தொடுக்கப்பட்டு உள்ள ஏதேனும் ஒரு வழக்கு, முறைப்பாடு, சட்ட செயற்பாடுகள், விழாக்கள்,

விடயம் அல்லது ஏதேனும் ஒன்று எனக் கருத்திற் கொள்ளப்படல் வேண்டியதோடு, அந்நீதி மன்றத்தால் வினவப்படும்.

(ஈ) ஏதேனும் ஒரு வழக்கு, முறைப்பாடு, சட்ட செயற்பாடுகள், விழாக்கள், விடயம் அல்லது ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் ஏதேனும் ஒரு நீதி மன்றத்தின் மூலம், கவுன்சில் அல்லது ஏதேனும் ஒரு சபை மூலம் இரத்துச் செய்யப்பட்ட இந்நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்க ஊழியர் ஆணைக்குழுவுக்க ஆதரவாக அல்லது முரணாக மேற் கொள்ளப்பட்ட, குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஒரு தீர்ப்பு கட்டளை அல்லது இந்நியதிச சட்ட நடைமுறையாகின்ற தேதிக்கு முன் தினம் அந்நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்காக அல்லது மேற்கொள்ளப்பட்ட, குறிப்பிடப்பட்ட, ஏதேனும் ஒரு தீர்ப்பு கட்டளை அல்லது தீர்ப்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டியதோடு அதன்படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

(உ) இந்நியதிச் சட்டம் நடைமுறையாகின்ற தேதிக்கு முன் தினம் அந்நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நிரந்தர பணிக்குழுவின் அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் இந்நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்படக் கூடிய நிரந்தர சேவைக் குழுவின் உத்தியோகத்தர்களும் மற்றும் ஊழியர்கள் எனக் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

(ஊ) இந்நியதிச் சட்டம் நடை முறையாகின்ற தேதிக்கு முன் தினத்திற்கு இரத்துச் செய்யப்பட்ட அந்நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவுடன் மற்றும் அதற்காக பெற்றுக் கொண்ட அனைத்து கடன்கள், உடன்பாடுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நடைமுறைப் படுத்தப்பட்ட அல்லது செல்வாக்குச் செலுத்துகின்ற அனைத்து விதமான உடன்பாடுகள் மற்றும் உடன்படிக்கையிலிருந்து உள்ளடக்கப்பட்டு உள்ள அனைத்து விடயங்கள் மற்றும் செய்து தருவதற்கு உடன்பட்டு உள்ள விடயங்கள் இந்நியதிச் சட்டம் நடைமுறையாகின்ற திகதி தொடக்கம் தாபிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் ஆணைக்குழுவுடன் மற்றும் அதற்காக ஏற்படுத்தப் பட்ட கடன்கள், உடன்பாடுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது செல்வாக்குச் செலுத்துகின்ற அனைத்து விதமான உடன்பாடுகள் மற்றும் உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டு உள்ள அனைத்து விடயங்கள் மற்றும் செய்து தருவதற்கு உடன்பட்டு உள்ள விடயங்கள் அனைத்தும் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

43. இந்நியதிச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, பொருள் கோடல்.

"கூட்டுறவுச் சங்கம்" என்பது, 1972 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு தென் மாகாணத்துக்கு உள்ளாக இருக்கும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் எனப் பொருள் ஆகும். இருப்பினும் இந்நியதிச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் கீழான விதிந்துரைக்கப்பட்ட தத்துவமானது ஏதேனும் ஒரு கூட்டுறவுச் சங்கம் தொடர்பாகவும் அச்சங்கம் உட்பட மாட்டாது.

"மாவட்டம்" என்பது தென் மாகாணத்துக்கு உள்ளாக இருக்கும் ஒரு நிருவாக மாட்டம் என்று பொருள்படும்.

"ஊழியர்" என்பவர் எதுவேனும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியம் வழங்குகின்ற மற்றும் அக்கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சம்பளம் பெறுகின்ற மற்றும் ஊழிய சேமலாப நிதிகள் செலுத்தப்பட்டு வருகின்ற யாதேனும் ஓர் ஊழியர் என்று பொருளாகும். இருப்பினும் அதற்கு உத்தியோகத்தர்கள் உள்ளடங்கமாட்டார்கள்.

"தொழில் தருநர் " என்பதனால் அதன் ஊழியர்களுக்கு அதன் நிதியத்தினால் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் செலுத்தப்படுகின்ற ஏதேனும் ஒரு கூட்டுறவுச் சங்கம் எனப் பொருள்படும்.

"அமைச்சர்" என்பதனால், தென் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி விடயம் தொடர்பாக அதிகாரம் அளிக்கப்பட்டு உள்ள மாகாண அமைச்சர் எனப் பொருள்படும்.

"சங்க உத்தியோகத்தர் " என்பது சங்கம் ஒன்றின் பொதுக் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட தலைவர், உப தலைவர், செயலாளர், பொருளாலர் போன்ற அனைத்து நபர்களையும் உள்ளடக்கும்;

"விதித்துரைக்கப்பட்ட " என்பது ஒழுங்கு விதிகள் மூலம் விதித்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

"மாகாணம் " என்பது தென் மாகாணம் எனப் பொருள்படும்;
"மாகாண ஆணையாளர் " என்பதன் மூலம் 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டத்தின் கீழ் தென் மாகாணத்திற்கு நியமிக்கப்பட்ட, மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் எனப் பொருள்படும்.

"மாகாண சபை " என்பது அரசியல் அமைப்புச் சட்டத்தின் 154 (அ) பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட தென் மாகாண சபை எனப் பொருள்படும்.

ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

44. இந்நியதிச் சட்டத்தின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

### உப அட்டவணை (14 ஆம் பிரிவு)

### ஆணைக்குழு உறுப்பினர்களது சத்தியம் அல்லது உறுதிமொழி

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினராக நியமிக்கப்பட்டு உள்ள ..................... ..........................................................................ஆகிய நான், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தலைவர்/உறுப்பினர் பதவியின் கடமைகளை பயமோ, நயமோ இன்றியும் பட்சமோ பேதமோ பாராட்டாமலும் நிறைவேற்றுவேன் எனவும் எனது கடமையின் போது தவிர வேறு வகையாக அத்தகைய பணிகள் தொடர்பிலான எக்கருமங்களையும் ஆள் எவருக்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வெளியிடமாட்டேன் எனவும் இத்தால் சத்தியம் செய்கின்றேன்/பயபக்தியுடனும் விசுவாசமாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

20 ............ ஆண்டு ............ மாதம் ............ ஆந் திகதி

................................................
சத்தியம்/உறுதி அளிப்பவரின் கையொப்பம்.

20 ............ ஆண்டு ............ மாதம் ............ ஆந் திகதியாகிய இன்று என் முன்னிலையில் சத்தியம் செய்யப்பட்டது./உறுதிப்படுத்தப்பட்டது.

..........................................
மாகாண உயர் நீதிமன்ற நீதிபதி.

04-892

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.